www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

கிண்ணம் 1 ஆடி எண்ணம் 7

17.07.1990



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

CHILDREN LITERATURE MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசை எனக்கெய்திட லாமோ?
- பாரதியார் -

அன்புச் சிறுவர்களே,

கடந்த அமுதத்தில் தட்டச்சுப் பொறிமூலம் சில பகுதிகளைத் தந்திருந்தோம். உங்களிற் பலருக்கு அந்த எழுத்துக்கள் விளங்காமலும், பிடிக்காமலும் இருந்ததாக உடனே எழுதியும், சொல்லியும், இருந்தீர்கள்.

உண்மைதான், உங்களுக்கு அந்த எழுத்துக்களில் சிரமம் இருந்திருக்கும் தான். சில பெற்றோர்களும் சுட்டிக் காட்டி, இருந்தார்கள். தட்டச்சுப் பொறி எழுத்துக்களில் பிரதி ஆக்கப் படும் போது, வடிவங்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. எனவே அதைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம். சரிதானே?

அடுத்து அமுதத்தில் வெளி வரும் விடுகதைகளுக்கு விடைகளை நாங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதி அனுப்பினால் என்ன? என்றும் சிலர் எழுதி இருக்கின்றார்கள். தற்போது புதிர்க்கதை களும் வரத் தொடங்கியுள்ளன. இதிலும் உங்கள் திறமையைக் காட்ட நீங்கள் விரும்புவீர்கள்-தானே? அமுதத்தில் வெளிவரும் விடுகதைகள், வினாவிடைப் போட்டி, புதிர்க்கதைகள், என்பவற் றிற்கான விடைகளை உங்களிடமிருந்து 'அமுதம்' எதிர்பார்க்கின்றது. சரியான விடைகள் எழுதியுள்ளவர்களுக்குப் பரிசு கொடுத்து ஊக்கு விக்க விரும்புகின்றோம்.

அடுத்துக் குறுக்கெழுத்துப்-போட்டியை நடாத்தினால் என்ன? என்று இரண்டொருவர் கேட்டிருக்கின்றார்கள். அது உங்களால் அமுதம் வளர்ச்சி பெறும் போது தானாகவே இடம் பெறும். நீங்கள் அமுதத்திற்கு எழுதி, உங்கள் அங்கங் களால் அமுதம் நிரம்பும் போது தான் எம்மால் குறுக்கெழுத்துப் போட்டி பற்றி யோசிக்கக் கூடி

www.tamilarangam.net

யதாக இருக்கும்.

அமுதத்தில் வெளிவருகின்ற புதிர்களுக்கும், வினாக்களுக்கும் விடைகளை எழுதி அனுப்புங்கள் பரிசு தருகின்றோம். ஆக்கங்களைத் தொடர்ந்து எழுதி அனுப்புங்கள். அமுதத்தைத் தொடர்ந்து இலவசமாக அனுப்புகின்றோம்.

அன்புடன்
ஆசிரியர்.

---

*வாசகர்களே,

உங்களுக்கு அமுதம் சஞ்சிகை தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றீர்களா? அப்படியாயின் உடனே ஒரு வருடச் சந்தாவான இருபத்தைந்து டி.எம் களை எமது வங்கிக்கணக்கு

114603688S BZ 37050299 .K.S.K

அனுப்பித் தொடர்ந்து பெற்றுக்கொள்ளுங்கள்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதன்

ஈசாப் எனும் பெயர் உள்ள அறிஞர் ஒருவர் கிரேக்க நாட்டில் இருந்தார். அவர் அறிஞராக இருந்தாலும், அடிமையாகவும், பார்க்கச் சகிக்க முடியாத அழகு உள்ளவராகவும் இருந்தார். நீங்கள் கேள்விப்படும், விரும்பிப் படிக்கின்ற மிருகங்கள், பறவைகள் கதைப்பது, போன்ற, பல நூறு கதைகளை எழுதியவர் தான் இந்த ஈசாப் என்பவர். இவர் எழுதிய கதைகளில் ஒன்று கீழே வருகின்றது. இது உண்மையிலே அவரது வாழ்வில் நடைபெற்ற சம்பவமாகும்.

ஈசாப் ஓர் அடிமை என்று மேலே சொல்லப்பட்டுள்ளது. அவரது எசமான் ஒருநாள் "ஆற்றிலே எத்தனை மனிதர்கள் குளிக்க வருகின்றார்கள் என்று கணக்கு எடுத்து வருமாறு" ஈசாப்பிற்குக் கட்டளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிட்டான். எசமானின் கட்டளைப்படி ஏ.சாப் ஆற்றங்கரைக்குச் சென்றார். அங்கு பாதையில் ஒரு சிறு கல் இருந்தது. குளிக்க வரும் போதும், குளித்து விட்டுத் திரும்பிச்- செல்லும் போதும் பலர் அக்கல்லில் தடக்கி விழுந்து எழும்பிச் சென்றார்கள். ஒருவர் கூட அக்கல்லைத் தூக்கி எறியவில்லை.

பின்னேரம், ஒருவன் அங்கு குளிக்க வந்தான். வழியில் கிடந்த கல்லைக் கண்டான். அதைத் தூக்கி எறிந்தான் பின்னர் ஆற்றில் வந்து குளித்து விட்டுச் சென்றான் இவன் ஒருவன் தான் ஆறாவது அறிவு உள்ள மனிதன். மற்றவர்கள் எல்லோரும் விலங்குகள் போல கல்லில் தடக்கி விழுந்து, அதைப் பற்றி எந்தவிதமான யோசனையும் இல்லாமல் போயிருக்கின்றார்கள். எனவே இன்று ஒரே ஒரு மனிதன் தான் ஆற்றில் குளித்திருக்கின்றான் என்றே

www.tamilarangam.net

எசமானிடம் சொல்ல வேண்டும் என எண்ணி வீடு திரும்பிய ஈ.சாப் தனது எசமானிடம் "இன்று ஒரே ஒரு மனிதன் தான் குளிக்க வந்தான்" என்று சொன்னார். எசமானுக்கு ஆச்சரியமாக இருந்தது. என்ன? ஒரே ஒரு மனிதனா? நூற்றுக் கணக்கில் அல்லவா? வருவார்கள். என்ன நடந்தது ?, என எசமான் யோசித்தான். ஈ.சாப் நடந்தவற்றை எல்லாம் விபரமாகச் சொன்னார்.

ஆறாவது அறிவைக் கொண்டு வாழ்பவன் மட்டுமே மனிதன். மற்றவர்கள் மனித வடிவில் திரியும் இரண்டு கால் விலங்குகள் தான் என்ற ஈ.சாப்பின் விளக்கம் எசமானுக்கு மனிதன் பற்றிய நல்ல விளக்கமாகவே இருந்தது ***



www.tamilarangam.net

# தெரிந்து கொள்ளுங்கள்

முதலில் ■ இந்த அடையாளம் இடப்பட்டு இப்புத்தகத்தில் தெரிந்து கொள்ள தகவல் அனுப்பியுள்ளவர் - ஸ்ரீ ■

■ மாயாஜால, மந்திர தந்திரக் கதைகளில் வர்ணிக்கப்படும் கோட்டைகள், அரண்மனைகள் வெறும் கற்பனை என்று தானே நினைக்கின்றீர்கள். அவை கற்பனை அல்ல! உண்மையானவை என்று ஜெர்மனியின் தென் பாகமாயுள்ள பவேரியாவை (BAYERN) ஆண்ட இரண்டாம் லூட்விக் என்ற அரசன் நொய்ஸ்வான்ஸ்டைனில் (Neuschwanstein) மூன்று கற்பனை மாளிகைகளைக் கட்டினான். பைத்தியக்கார அரசன் என்ற பட்டம் பெற்ற லூட்விக் ஒரு மாளிகை அரைவாசிக்கு வருமுன் அடுத்த மாளிகைக்கு அத்திவாரம் போட்டு விடுவானாம். லூட்விக் எப்படிப்பட்ட பைத்தியக்காரனாயிருந்தாலும், ஜேர்மனிக்கு ஒரு பெரிய உலக அதிசயம் கிடைத்திருக்கின்றது ■

www.tamilarangam.net

# கதையும்-காரணமும்

நெடுங்காலத்திற்கு முன்னால் விலங்குகளும் மனிதர்களைப் போலவே பேசின, என்றும், மனிதர்களைப் போலவே வாழ்ந்தன என்றும் பல நாட்டுப் பழங்கதைகளில் சொல்லப்படுகின்றன; நம்பப் படுகின்றன. கீழே வரும் கதை இந்தியாவின் வங்காள மாநிலத்தில் சொல்லப்பட்டு வரும் கதையாகும். இக் கதையைத் தொடர்ந்து அறிவியல் ரீதியான விளக்கமும் வருகின்றது.

காசிக்கு அருகே உள்ள ஒரு பெரிய காட்டில் முயல், நரி, குரங்கு, கீரி ஆகிய நான்கு விலங்குகளும், தனித்தனியே தவம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் ஒரு முதியவர்

www.tamilarangam.net

அக் காட்டுப் பகுதிக்கு வந்தார். வரும் வழியி-
ல் நரியைக் கண்டார். தனக்குப் பசி என்றும்
சாப்பாடு இருந்தால் தரும்படியும் கேட்டார்.
அதற்கு நரி, தன்னிடம் பழைய இறைச்சி
இருப்பதாகவும், அதைத் தருவதாகவும் சொல்லி-
யது. முதியவர், தான் இறைச்சி உண்பதில்-
லை எனச் சொல்லிப் புறப்பட்டார்.

வழியில் தவம் செய்து கொண்டி-
ருந்த நீரியை முதியவர் கண்டார். அதனிடம்
தனது பசியைச் சொல்லிச் சாப்பாடு
கேட்டார். நீரி தன்னிடம் இருந்த மீன்களை
எடுத்துக் கொடுத்தது. அதற்கு முதியவர்
தான் மீன் சாப்பிடுவதில்லை எனச்
சொல்லிப் புறப்பட்டார்.

வழியில் தவம் செய்து
கொண்டிருந்த குரங்கைக் கண்டார். அதனிடமும்
தனது பசியைச் சொன்னார். குரங்கு தன்னி-
டம் இருந்த மாம்பழங்களைக் கொடுத்தது.

www.tamilarangam.net

அதற்கு அந்த முதியவர், தான் மாம்பழம் சாப்பிடுவதில்லை எனச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

செல்லும் வழியில் முயல் தவம் செய்து கொண்டிருந்தது. முயலிடம் முதியவர் தனது பசி நிலையைச் சொன்னார்.
முயல் தின்பது புல் ஆகும். அதை இவருக்குக் கொடுக்கலாமா? என முயல் சிறிது நேரம் யோசித்தது. "தன்னை விட நல்ல உணவு இருக்க முடியாது" என்ற முடிவுக்கு முயல் வந்தது. "முதியவரே இந்த அடுப்பில் நல்ல நெருப்பு மூட்டுங்கள். சிறிது நேரத்தில் சாப்பாடு தயாராகிவிடும் என்று பணிவாக முயல் கூறியது.

முதியவரும் நெருப்பை மூட்டி எரித்துக் கொண்டிருந்தார். திடீரென முயல் அந்த நெருப்புக்குள் விழுந்தது. அந்த நெருப்பு முயலை

www.tamilarangam.net

எரிக்கவில்லை. குளிர் போல இருந்தது.
"ஐயா, நன்றாக நெருப்பை மூட்டுங்
-கள்; இன்னும் என்மீது நெருப்புப் படவேயில்-
லை என்று முயல் சொன்னது.

வந்த முதியவரின் தோற்றம் நீண்டு
உயரமாக வளர்ந்தது. "இனிய முயலே,
உன் நற்பண்பை ஆராய்வதற்காகவே நான்
முதியவன் வேடத்தில் பசி என்று சொல்லி
வந்தேன். நீ உன் நற்பண்பினை
நிரூபித்து விட்டாய்" மற்றவர்களுக்காக
வாழ்வதும் மற்றவர்களுக்காக இறப்பதும்
மிகச் சிறந்த தியாகம் ஆகும். உயர்ந்த
எண்ணம் கொண்ட உன்னை உயர்ந்த
இடத்தில் வைக்கின்றேன். என்று சொல்லி
இறைவன் முயலை நிலவில் தூக்கி
வைத்தார்*

நிலவில் முயல் போன்ற வடிவம்
தெரிவதற்கு இப்படியான வேறுபற் பல

www.tamilarangam.net

கதைகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமாகச் சொல்லப்பட்டு வருகின்றன. நிலவில் ஒளவைப் பாட்டி, பாக்கு உரலோடு இருப்பதா-கவும் கதைகள் இருக்கின்றன.

பழங்காலத்தில் அறிவியல் வளர்ச்சி பெறவில்லை. இப்படியான கதைகள் நம்பப்பட்டு வந்தன. இன்று இப்படியான கதைகளை நம்ப யாருமே தயாராக இல்லை. மனிதன் சந்திரனுக்குப் போய் வந்து விட்டான். அங்கு காற்றே இல்லை. காற்று இல்லாத இடத்தில் முயலோ, ஒளவைப் பாட்டியோ வாழமுடியாது என்பது உங்களுக்குத் தெரியும்.

நிலவுக் கோளில் ஏராளமான மலைச் சிகரங்களும் பள்ளத் தாக்குகளும் உள்ளன. நிலவை உற்றுப் பார்க்கும் போது இப்பகுதிகள் (கறுப்பாகத் தெரிவன) பல விதமான வடிவங்களில் தெரிகின்றன.

www.tamilarangam.net

ஔவைப் பாட்டி போல உருவம் கண்டவர்கள் ஔவைப் பாட்டிக் கதையையும் முயல் போல உருவம் என்றவர்கள் முயல் கதையையும் எழுதினார்கள்; சொன்னார்கள்.

எனவே அறிவியல் ரீதியாகச் சந்திரனில் (நிலவில்) மலைகளும், பள்ளத்தாக்குகளுமே கறுப்பாகத் தெரிகின்றன. அவையே பார்க்கும் போது விதம் விதமான வடிவங்களைக் காட்டுவது போல உள்ளன.

■ தேனீ தன்னுடைய நிறையைப் போல 300 மடங்கு பாரத்தைச் சுமக்கும் வலிமை பெற்றது.

● ஒருவனால் ஒரே நேரத்தில் கிழக்கையும் மேற்கையும் பார்க்க முடியாது.

— சோவியத் ரஷ்யா —

● ஒருவனால் ஒரே நேரத்தில் கிறிஸ்துவையும், கிருஷ்ணனையும் வணங்கமுடியாது. ஆனால், நடிக்கமுடியும்.

— தமிழ்நாடு —

www.tamilarangam.net

# பாப்பாப் பாட்டு

## அம்புலிப் பாட்டுப் பாடாதே!

அம்புலி அம்புலி வா வா!'' எனவே
அம்மா சும்மா பாடாதே!
அம்புலி இங்கே வரமாட்டான்!
அமெரிக்க மாமா விடமாட்டான்!

அம்புலிப் பாட்டுப் பாடாதே!
அம்மா சும்மா தேடாதே!
அம்புலி இங்கே வரமாட்டான்!
அமெரிக்க மாமா விடமாட்டான்!

அமெரிக்க மாமா அம்புலி தன்னை
அடிக்கடி எட்டிப் பார்க்கின்றான்!
அவனையும் மிஞ்சி, சோவியத் மாமா
சுக்கிரன் தேடிப் பறக்கின்றான்!

மாமா இருவரும் தனித் தனியாக
வான வெளியைக் கலக்குவாராம்!
நாமே வான மண்டலம் தேடும்
நல்ல நாளும் எந்நாளோ!

விண்ணில் தெரியும் சந்திரனும் ஒரு
விளையாட்டுப் பொம்மை இல்லையம்மா!
என்னை நிலவுப் பாட்டாலே
ஏமாற்ற வேண்டாம் என்தாயே!

அம்புலிப் பாட்டுப் பாடாதே!
அம்மா சும்மா தேடாதே!
அம்புலி இங்கே வரமாட்டான்
அமெரிக்க மாமா விடமாட்டான்!

புத்தனேரி சுப்பிரமணியம்

www.tamilarangam.net

# அட்டைப்படம்

அட்டைப் படத்தை இன்னும் ஒரு தடவை நன்றாக உற்றுப்பாருங்கள். இரண்டு சிறுமிகள் நடனம் ஆடிக் கொண்டிருக்கின்றார்கள். அல்லவா? இந்த மாதம் என்னென்று தெரியுமா? யூலி என்று சொல்வீர்கள். அப்படித்தானே? அதுவும் சரிதான். தமிழில் இந்த மாதத்தை ஆடி என்று சொல்லுகின்றோம்.

ஆடி மாதத்தை அட்டைப்படமாக எப்படிப் போடமுடியும்? ஆடி என்று பெரிய எழுத்தில் போட்டு விடலாமே என்று சொல்வீர்கள். அப்படிப் போடுவதை விட ஆடிக் கொண்டிருக்கின்ற ஒரு படத்தைப் போட்டு, ஆடி என்று பெயர்ச் சொல்லில் வருவது மாதத்தையும், வினைச் சொல்லில் வருவது ஆடிக்கொண்டிருப்பதையும் உங்களுக்குச் சொல்லத்தான் இம்மாத அட்டைப்படம்.

www.tamilarangam.net


# சாயம்

அழகான கூட்டில் பல புறாக்கள் வாழ்ந்து வந்தன. கூட்டில் வசதியுடன் புறாக்கள் வேளா வேளைக்கு நல்ல சாப்பாடு சாப்பிட்டு மகிழ்ச்சியாக இருந்து வந்தன. இதைக் கண்ட காகம் ஒன்று பொறாமைப் பட்டது. தானும் புறாக்களைப் போல வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டது. புறாக்களின் நிறம் போன்ற சாயத்தைத்(கலர்) தன்மீது பூசிக் கொண்டது. சாயம் பூசிய காகத்தைக் கண்ட புறாக்கள் தம் இனத்தைச் சேர்ந்த புறா ஒன்று தனித்து வாழ்வதை விரும்பாமல் அதையும் தம்முடன் சேர்த்துக் கொண்டன.

சாயம் பூசிய காகத்திற்கு நல்ல சாப்பாடு, வசதியான வசிப்பிடம்

www.tamilarangam.net

என்று
மகிழ்ச்சியாகக் காலம் போய்க் கொண்டிருந்தது



ஒரு நாள் சாயம் பூசிய காகம் சந்தோச மிகுதியால் பாட ஆரம்பித்தது..

கா.. கா... கா... எனப் பாடியது.

கூட்டுப் புறாக்கள், சாயம் பூசிய காகத்தைக் கொத்தி விரட்டித் துரத்தி விட்டன.

தனது வேடம் கலைந்த சோகத்தால், சாயம் பூசிய காகம் தனது பழைய இடத்திற்குப் போனது. அங்கு மற்றக் காகங்கள் "புறா ஒன்று தான் தம்மைப் போல கத்திக் கொண்டு வருவதாகவும், தம்முடைய உணவைத் திருடவே இப்படியாக வருகின்றது, என நினைத்துக் கொத்தித்

www.tamilarangam.net

நூரத்தினை சாயம் பூசிய காகம் புறாக்க-
-ளுடனும் வாழமுடியாமல், தன் இனத்துடனும்
வாழ முடியாமல் இரெண்டும் கெட்டான்
நிலையில் நின்று அவலப்பட்டது*

## சிறுமியின் பாடல்

கண்ணா கண்ணா இங்கே வா
கருணை மன்னா இங்கே வா
வெண்ணெய் தருவேன் வா வா
வேணுகானம் பாடி வா — என்
எண்ணம் சொன்னேன் கோபமோ?
என்னில் கோபம் ஏனோதான்
கண்ணா கண்ணா இங்கே வா
கருணை மன்னா இங்கேவா.

பிங்கலை-இராஜேஸ்வரன்

மொழி உயிரோடு இருக்கும் வரையே. சமுதாயமும் உயிரோடு இருக்கும் [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெனாலிராமன்

## ஏற்றமிறைத்த திருடர்கள்!

ஒரு சமயம் விஜயநகரத்தில் வரட்சி நிலை ஏற்பட்டது. பருவமழை தவறிவிட்டதால் குளம் குட்டைகளெல்லாம் வரண்டு விட்டன. இராமன் வீட்டுத் தோட்டத்திலுள்ள கிணற்றிலும் நீர் குறைந்துவிட்டது.

கிணற்றில் ஏற்றம் இறைத்துச் செடி கொடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச இராமன் மிகவும் கஷ்டப்பட்டான்.

அச்சமயத்தில் ஒருநாள் அவனுடைய தோட்டத்தில் நான்கு திருடர்கள் பதுங்கிக்கொண்டிருந்ததைக் கண்டான்.

உடனே வீட்டுக்குள் வந்து, "அடியே! நம் நாட்டில் பருவமழை தவறிவிட்டதால் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. இதன் காரணமாக ஊரில் திருடர்கள் நிறைய பேர் கிளம்பி விட்டனர். என்றாவது ஒருநாள் திருடர்கள் நம் வீட்டிலும் புகுந்து நம் வீட்டிலுள்ளதையெல்லாம் திருடக் கூடும்" என்று மனைவியிடம் உரக்கக் கூறினான் இராமன்.

"அதற்கு என்ன செய்யலாம்?" என்று இராமனுடைய மனைவி கேட்டாள்.

"நீ போட்டிருக்கிற நகை நட்டு எல்லாவற்றையும் கழற்று. ஒரு முடிப்பில் முடிந்து இந்தப்பெட்டியில் போடு. விலையுயர்ந்த பாத்திரங்களையும் இந்தப் பெட்டியில் போட்டு மூடு. இந்தப் பெட்டியை நாம் எடுத்துச் சென்று கிணற்றில் போட்டு விடுவோம். திருடர் பயம் குறைந்த பிறகு நாம் பெட்டியைக்

www.tamilarangam.net

கிணற்றிலிருந்து எடுத்துக்கொள்வோம்'' என்று உரத்த குரலில் கூறினான்.

இது தோட்டத்திலிருந்த திருடர்கள் காதில் விழுந்தது.

''அண்ணே, கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் இருக்கிறது. அனாவசியமாக இராமனின் வீட்டுக்குள் புகுந்து திருட வேண்டாம். அவனே நகைப்பெட்டியை எடுத்துவந்து கிணற்றில் போடுவான். அவன் போன பிறகு நாம் கிணற்றி லிருந்து பெட்டியை எடுத்துக்கொள்ளலாம்'' என்றான் திருடர்களில் ஒருவன்.

மற்றவர்களும் இதற்கு ஆமோதித்தனர்.

இதனிடையில் இராமன் மனைவியிடம் திருடர்கள் வந்திருக்கிறதை இரகசியமாகக் கூறிவிட்டு, பெட்டிக் குள் கற்களையும், ஓட்டை உடைசல் சில்லுகளையும் வைத்து மூடினான். பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து கிணற்றில் போட்டான்.



www.tamilarangam.net

இராமன் வீட்டுக்குள் போனதும் திருடர்கள் கிணற்றருகில் வந்தனர். கிணறு ஆழமாக இருந்தது. அதற்குள் இறங்கத் திருடர்கள் பயந்தனர்.

"அண்ணே, கிணற்றில் தண்ணீர் குறைவாகத் தான் இருக்கிறது. நாம் நால்வரும் ஏற்றம் இறைத் தால் தண்ணீர் வற்றிவிடும். பிறகு சுலபமாகக் கிணற்றுக்குள் இறங்கிப் பெட்டியை எடுத்துச் சென்று விடலாம்" என்றான் திருடர்களில் ஒருவன்.

அதன்படி திருடர்கள் நால்வரும் ஏற்றம் இறைக்க லாயினர்.

சற்று நேரம் கழித்துத் தெனாலி இராமன் வேறு வழியாகத் தோட்டத்திற்குச் சென்றான். பாத்திகளை வெட்டித் தண்ணீர் எல்லாச் செடி கொடிகளுக்கும் பாயுமாறு செய்துவிட்டான்.

பொழுது விடிந்து கொண்டிருந்தது. இன்னும் கிணற்றிலிருந்த தண்ணீர் குறையவில்லை. திருடர்கள் மறுநாள் வந்து தண்ணீர் இறைக்கலாம் என்று பேசிய படியே சென்று கொண்டிருந்தனர்.

அப்பொழுது தோட்டத்திலிருந்து வெளியே வந்த இராமன், "நாளைக்கு நீங்கள் வரவேண்டாம். இப் பொழுது நீங்கள் இறைத்திருக்கிற தண்ணீர் இரண்டு நாட்களுக்கு வரும். போய் வாருங்கள், நண்பர்களே! உங்கள் உதவிக்கு நன்றி!" என்று திருடர்களைப் பார்த்துக் கூறினான்.

திருடர்களுக்கு அவமானமாகப் போய்விட்டது. தங்களிடமே இராமன் வேலை வாங்கிக் கொண்டதை நினைத்து ஓட்டம் பிடித்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது தாய் நாடு

- விஜிதா-இராமலிங்கம் -

எமது தாய் நாடு

சுதந்திரம் பெறுவதற்கு முன்னர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற ஐரோப்பிய இனத்தவர்களால் ஆளப்பட்டு வந்துள்ளது. எமது நாட்டின் வாசனைத் திரவியங்களும், அதன் அமைவிடமும் ஐரோப்பியரைக் கவர்ந்தது; என்பது வியப்புக்குரியதல்ல.

இலங்கை நிர்வாக வசதிகளுக்காக ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவையாவன:- வட-மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம், மத்திய மாகாணம், கிழ் மாகாணம், மேல் மாகாணம், ஊவாமாகாணம், சப்பிரகமுவா மாகாணம் தென்மாகாணம் என்பனவாகும். எல்லா மாகாணங்களிலும், பரவலாகத் தமிழர்கள் வாழ்கின்றார்கள், என்றாலும்,

www.tamilarangam.net

வடமாகாணம், கிழமாகாணம் இரண்டிலும் தமிழர் பாரம்பரியமாக, மிக நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

இலங்கையின் பிரதான தொழில் விவசாயம் ஆகும். நான்கு புறமும் கடலால் சூழப்பட்டிருப்பதால், மீன் பிடித்-தொழிலும் முக்கியம் பெறுகின்றது. இங்கு வாழும் மக்களின் உணவு அரிசிச் சோறு ஆகும். ஐரோப்பியரின் வருகையின் பின்னர் கோதுமையும் இலங்கை மக்களின் உணவி-ல் பிரதான இடம் பெறுகின்றது.

கோதுமை பயிரிடக் கூடிய காலநிலை இலங்கையில் இல்லாத படியால் கோதுமை இறக்குமதி செய்யப் படுகின்றது. இலங்கையிலிருந்து, தேயிலை, இறப்பர், கொக்கோ, ஏலம் கறுவா போன்ற வாசனை-த் திரவியங்களும், இரத்தினக் கற்களும் பெருமளவில் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

www.tamilarangam.net

இலங்கையின் தரைத்தோற்ற அழகும், மலைகளும், நதிகளும் மேலும் அழகு ஊட்டுகின்றன. இதனால் வெளிநாட்டவர் உல்லாசப் பிரயாணிகளாக இலங்கைக்கு அடிக்கடி வருகின்றார்கள்.

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களான சிகிரியா, அநுராதபுரம், பொலநறுவை, கண்டி, மகியங்கனை திருகோணமலை என்பவற்றுடன் இந்துக்களின் முக்கிய தலமாக விளங்கும் திருக்கேதீஸ்வரமும் பிரசித்தி பெற்ற இடங்களாகும்.

"கிழக்கின் சுவர்க்கம்" எனப் பெருமைப் பட்ட நமது நாடு இனப்பிரச்சினைகளாலும், வன்முறைகளாலும் தனது பெருமைகளை இழந்து விட்டது என்பது கவலை தரக்கூடியதாயுள்ளது.*

(வளரும்)

www.tamilarangam.net

# வினாவிடைப் போட்டி - 1

1. அமுதம் முதலாவது இதழில் திருவள்ளுவரு-டைய படம் வந்தது. அவர் இயற்றிய நூலின் பெயர் என்ன?

2. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் யார்?

3. எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் பலூனைக் கண்டு பிடித்தார்கள்?

4. ஜமுனா ஏரி எங்கே உள்ளது?

5 தமிழ் எழுத்துக்கள் எல்லாமாக எத்தனை எழுத்துக்கள்?


விடைகளை அமுதம் முகவரிக்கு....
25.07.90 முன்னர் எழுதி அனுப்புங்கள்.
சரியான விடைகளை எழுதியவர்களுக்குப் பரிசு வழங்கப்படும்.

- ஆசிரியர் -

www.tamilarangam.net

# புதிர்ப் போட்டி

சிறுவர்களே; சோதிடம் என்றால் என்ன என்று தெரியுமா உங்களுக்கு? ஆனால் சாத்திரம் என்றால் பலருக்குத் தெரியும். சோதிடம் என்பதும் சாத்திரம் என்பதும் ஒன்றுதான்.



சோதிடம் என்பதை நம்மவர்களில் பலர் நம்புகின்றார்கள். இவர் அதைப், பொருட்படுத்துவது கிடையாது. எதிர் காலத்தில் என்னென்ன நடக்கும் என்று சொல்வது தான் சோதிடமாகும்.

www.tamilarangam.net

முந்திய காலங்களில் அரச சபைகளில் சோதிட வல்லுனர்களும் முக்கிய பங்கு வகித்தார்கள். சோதிடர்களின் ஆலோசனை, அறிவுரைகளை, ஏற்றே பல அரசர்கள் ஆட்சி புரிந்து வந்திருக்கின்றா-ர்கள்.

சோதிநாதர் எனும் சோதிடவல்லுனர் ஒருவர், வதனபுரி எனும் நாட்டு அரசவையில் தலைமைச் சோதிடராகப் பல ஆண்டு காலம் இருந்து வந்தார். சோதிநாதரின் அறிவும், பண்புகளும் அரசனை விட அவருக்கு அந்த நாட்டில் அளவில்லாத புகழையும், மதிப்பையும் கொடுத்திருந்தன.

சோதி நாதரின் மீது பொறாமை கொண்ட அரசன், ஒருநாள் அரசவையில் வைத்து அவரை அவமதிக்க முயன்றான்.

"சோதிட ஆசான் சோதிநாதரே,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லோருக்கும் ஆயுள் இவ்வளவு நாள் வரை என்று சொல்லுகின்றீரே, ஆனால் உம்முடைய ஆயுள் எந்நாளில் என்று இது நாளும் சொல்ல வில்லையே? என்று சொல்லும் உமது ஆயுள் எந்த அளவில்" என்று அரசன் சோதிடநாதரிடம் கேட்டான். சபையில் இருந்தவர்கள் சிரித்தனர். சோதிநாதருக்கு அரசனின் கபடம் விளங்கி விட்டது. அவர் என்ன பதில் சொல்லி இருப்பார்? இது தான் இந்த மாதப் புதிராகும்.

இதைக் கண்டு பிடிக்க உதவியாக, தனது ஆயுள் 10 வருடங்கள் என்று சோதிநாதர் சொல்லியிருந்தால்? இல்லை இதோ ஆயுள் முடிகின்றது எனச்சொல்லி அரசன், சோதிநாதரை வாளால் வெட்டி இருப்பான். இது தெரிந்த சோதிடநாதர் என்ன பதில் சொல்லித் தப்பி இருப்பார்?

www.tamilarangam.net

விடைகளைத் தெரிந்து

கொண்டவர்கள் "அமுதத்திற்கு' 257.90 முன்னர் எழுதி அனுப்பவும். சரியான விடை எழுதிய வருக்குப் பரிசு, அதுவும் 'புதிர்' தான். உடன் எழுதி அனுப்புங்கள் *

■ ஒட்டகத்தின் முதுகு கோணல் மாணலாய் இருக்கின்றது. ஆனால் அதன் முதுகு எலும்பு சுத்தமான நேர்கோடு போலவே இருக்கின்றது.

■ RUN என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 832 விதமான அர்த்தங்கள் இருக்கின்றதாம்.

டெலஸ்க்கோப் எனப்படும்,

■ தூரதரிசினியைக் கண்டுபிடித்தவர் யார் என்றால்; கலிலியோ என்று தானே சொல்லப் போகின்றீர்கள்.?. தவறு! தவறு! அதைப்பயன் படுத்தியவர்தான் கலிலியோ. ஆனால் அதைக் கண்டு பிடித்தவர் ஹோலண்டைச் சேர்ந்த ஹான்ஸ் லிப்பர்சே என்பவர்தான் —


www.tamilarangam.net

# விடுகதை விடைகள்

1. நாணயம் (பணம்) 2. குருவிக்கூடு.
3. முட்டை 4. எதிரொலி, 5. நாக்கு
6. குழி (பள்ளம் - கிடங்கு) 7. கரும்பலகை
8. பாம்பு. 9. அம்புலி. 10. வௌவால்

கொக்குப் புதிர்கதையில் ......

"நான் ஒரு காலைக்கொண்டு வந்து தந்த போதும் நீங்கள் 'ச்சூய்' என்று கத்தியிருக்கலாம்" என்று வேலைக்காரன் சொல்லியிருப்பான். அல்லது 'கொக்குகள் பறக்கும் போது மட்டுந்தான் இரண்டு கால்கள்' என்றும் சொல்லித் தப்பி இருக்கலாம் அல்லவா?



பத்துக் கற்களை ஒரு வரிசையில் 4 தெரியக் கூடியதாக 5 வரிசையில் இப்படித்தான் வைக்க வேண்டும்.


www.tamilarangam.net

# சேவலும் பூனையும்

ஒரு வீட்டில் ஒரு பூனையும் ஒரு சேவலும் ஒன்றாக வாழ்ந்து வந்தன. பூனைக்குச் சேவலை ஒரு நாளைக்குச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ஏதோ சேவல் மீது பெரிய அன்பு உள்ளது போல நடித்து வந்தது.

வஞ்சகம் அறியாத சேவலும் பூனையுடன் அன்பாகவே பழகி வந்தது. ஒரு நாள் வீட்டில் ஆட்கள் இல்லை. பூனை; சேவலின் அருகே வந்தது. "சேவலே நான் உன்னைப் பிடித்துச் சாப்பிடப் போகின்றேன்" என்றது பூனை. அதற்குச் சேவல் "நீ என்னுடன் அன்பாகத்தானே பழகுகின்றாய். நானும் உன்னுடன் அன்பாகத் தானே பழகுகின்றேன் நீ ஏன் என்னைச்

சாப்பிடவேண்டும்" என்று சேவல் கேட்டது. அதற்குப் பூனை "உன்னுடைய பழக்கவழக்கங்கள் நல்லாயில்லை." என்றது. "என்ன? என்னுடைய பழக்க வழக்கங்கள் நல்லாயில்லையா? நான் அதிகாலையில் 'கொக்கரக்கோ' என்று கூவி மக்களை எழுப்பி நேரத்தோடு வேலைகளைச் செய்ய உதவுகின்றேனே" என்று சேவல் சொல்லியது.



அதற்குப் பூனை "நீ கூவி எழுப்பி உதவுவதாக நினைத்துக் கொண்டி-

-ருக்கின்றாய்! உண்மையிலே நீ மக்களினைதும் ஏனைதும் நித்திரையைக் குழப்புகின்றாய்! சகிக்க முடியாத காட்டுக் கத்தல் போடுகின்றாய். இது ஒன்றே போதும் நீ உயிரோடு இருக்கக் கூடாது என்பதற்கு" என்று கூறிக் கொண்டே பூனை, சேவலின் மீது பாய்ந்து கடித்தது. சேவல் துடி துடித்துச் செத்தது. பூனை மகிழ்ச்சியாகச் சேவலின் இறைச்சியைச் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்டது.

"தீயோருக்கு நன்மையும் தீமையாகவே தெரியும் என்ற இந்நீதி ஈ.சாப் நீதிக் கதையில் சொல்லப்பட்டுள்ளது. இதன் உண்மைகளை நாங்கள் நேரிலே கண்டு கொண்டிருக்கின்றோம். ***

---

■ உலகில் உள்ள சீவராசிகளுக்குள்ளே அதன் உருவத்தோடு ஒப்பிடும் போது மிகப்பெரிய மூளை எறும்பு களுக்குத்தான் இருக்கின்றன.

www.tamilarangam.net

# செய்து பாருங்கள்

MEMORY CARDS அல்லது PLAYING CARDS 10 எடுத்துக் கொள்ளுங்கள். பின்புறம் தெரியக் கூடியதாக வட்டமாக அடுக்கி வையுங்கள். எங்காவது ஒரு காட்டிலிருந்து (அட்டையிலிருந்து) 1, 2, 3, 4, என்று எண்ணி முடியுங்கள். 4வது காட்டைப் படம் தெரியும் படி நிமிர்த்தி வையுங்கள். இப்படியே தொடர்ந்து செய்யுங்கள். ஆனால்; படம் தெரிகின்ற காட்டிலிருந்து தொடங்கக் கூடாது. 4வது எண்ணில் முடியும் போது அது படம் தெரியக் கூடிய காட்டாக இருந்தால்? அதைப் படம் தெரியாதவாறு கவிழ்த்து வைக்க வேண்டும்.




இப்படி நீங்கள் 9 காட்டுக்களைப் படம் தெரியக்கூடியதாக வைத்தால் போதும்.

படத்தைக் கவனித்துப் பார்க்கவும். →


பொழுது போக்குவதற்கு இது நல்ல வேலை. எங்கே தொடங்குங்கள் பார்க்கலாம்; உங்கள் திறமையை. - ஸ்ரீ.

www.tamilarangam.net

# கடவுள்

ஒரு கிராமத்தில் ஒரு கடவுள் பக்தர் இருந்தார். அவர் சாதாரண பக்தர் அல்ல!. எந்த நேரமும் கடவுளின் பெயரையே வாயில் உச்சரித்த படியே இருப்பார். எல்லாம் கடவுளின் செயல் என்ற நம்பிக்கையிலே வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் அயலில் உள்ள கிராமத்திற்குச் செல்லவேண்டியிருந்தது. தனது மாட்டு வண்டியில் போய்க்கொண்டிருந்தார். வழியில் மாட்டு வண்டியின் ஒரு பக்கச் சில்லு சாதுவாகச் சேற்றில் புதைந்துவிட்டது.



www.tamilarangam.net

கடவுள் பக்தர் வண்டியை விட்டுக் கீழே இறங்கினார்.

கடவுளே எனது வண்டியைச் சேற்றிலிருந்து நீதான் தூக்கிவிடவேண்டும். உன் அருளால் தான் என் வண்டி சேற்றிலி-ருந்து வெளியே வரும் என நம்பிக்கொண்-டிருக்கின்றேன். என்று கடவுளிடமே முறை யிட்டுக் கொண்டிருந்தர். வண்டியை வெளியே எடுக்க எந்த விதமான முயற்சியும் மேற்-கொள்ளவில்லை.

நேரம் செல்லச் செல்லப் பொழுதும் இருட்டிக் கொண்டு வந்தது. கடவுள் பக்தரும், கடவுள் வந்து தனது வண்டிச் சில்லைச் சேற்றிலிருந்து எடுத்து விடுவார் என்ற நம்பிக்கையிலிருந்து விட-பட்டார்.

கடவுள் பக்தருக்குக் கடவுள் மீது கோபந்தான் வரத் தொடங்கியது. கடவுளை வாயில் வந்த படி எல்லாம் திட்டத் தொடங்கி

www.tamilarangam.net

னார். உன்னை அன்புள்ளம் கொண்டவன், அன்புக்குக் கட்டுப்பட்டவன். அடியார் குறை தீர்ப்பவன் என்றெல்லாம் மற்றவர்கள் சொன்னவற்றை யெல்லாம் நம்பியிருந்-தேனே! கடவுள் என்பது பொய்தான். கடவுள் உண்மை என்றால் எனது வண்டிச் சில்லைத் தூக்கியிருக்க வேண்டுமே!, என்று புலம்பிக் கொண்டிருந்தார்.

திடீரெனக் கடவுள் அந்தக்கடவுள் பக்தர் முன் தோன்றினார். "முட்டாளே! உனக்கு நான் அறிவையும், வலிமையையும் தந்திருக்கின்றேன். நீ அவற்றைக்கொண்டு ஏதாவது முயற்சி செய்து பார்த்தாயா? உன்னால் முயற்சி செய்யாமல் கடவுளே என்று அழைப்பது உனக்கு வெட்கமில்லையா?, முதலில் உனது அறிவையும், வலிமையையும் பயன் படுத்து." எனச் சொல்லிக் கடவுள் மறைந்தார். *

www.tamilarangam.net

## விடுகதை விருந்து

இவை என்ன என்று - கண்டு பிடியுங்கள்.


1. கையில் தவழும் பையில் உறங்கும்.
2. அள்ளலாம் கிள்ள முடியாது.
3. காட்டுக்கும் மேட்டுக்கும் ஒரே சங்கிலி.
4. தெரிந்து பூப்பூக்கும். தெரியாமல் காய் காய்க்கும்.
5. வெய்யிலில் மலரும் காற்றில் உலரும்.
6. அகன்ற காட்டில் ஒரே ஒரு பாதை
7. ஒரு சாண் உடம்பு. உடம்பு நிறையப் பல்.
8. நூறு கடையை மூடினால் ஒருகடை.
9. குதிரை ஓட ஓட வால் குறையும்.
10. ஒன்பது பிள்ளைகளுக்கும் ஒரு குடுமி.

விடைகளை நீங்கள் எழுதி அனுப்புங்கள். இல்லையேல்? காத்திருங்கள் *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# AMUTHAM 17.07.1990 AADI



இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு
மழை வளம் உள்ளது எம் நாடு
மண் வளம் உள்ளது எம் நாடு
நெல்லொடு தேயிலை, தென்னை, பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடு

தொடர்புகளுக்கு

SINNA-RAJESWARAN
"AMUTHAM"
GLADBACHER STR-16
5013 ELSDORF (RHLD)
02274.7674

KINDERFREUNDLICH MAGAZIN

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்